
www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு 32

## கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

அவர்களுக்குரிய மரியாதைகளும் வரிசைகளும் ஆணைப்பத்திர மூலமாகத் தேசாதிபதி கைச்சாத்தோடு நியமன நிரூபம் பெற்றாருள்ளே



முதல்வர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் சிகிவாகன ஐயர் புத்திரராகிய வாலசுப்பிரமணிய ஐயர். இவருக்கு நியமனபத்திரம் 1807 ஆம் ஆண்டு ஜனவரி மீ 5 ஆம் திகதி தேசாதிபதி தோமஸ் மெயிற்லண்ட் (கவனர்) அவர்களாற் கொடுக்கப்பட்டது. அப்பத்திரம் இன்றும் அவர் சந்ததியாரிடமுள்ளது. கிறிஸ்து வருஷம் 1870 ஆம் வருஷம் தை மீ 5 ஆம் திகதி சகல குருத்துவ மரியாதைகளுடன் குரு பிரதானியாக இவருக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படி, வேறு ஐந்து குருமார்களை இவருக்குத் துணையாக குருத்துவம் நடத்தும்படியும் கவனர் உத்தரவு செய்திருக்கின்றார். அவர்களில் கணபதி ஐயரும் இராமசாமி ஐயரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். பக்தகோடிகளால் நன்கு மதிக்கப் பெற்றுச்சிறப்பாக நித்திய நைமித்தியங்கள் நடைபெற்றன. கந்தசுவாமி கோவில் ஆலய நிர்வாகத்தில் பிரதம அர்ச்சகர் சுப்பையருக்கும் தர்மகர்த்தா ஆறுமுக மாப்பாணருக்கும் இடையில் பிரச்னைகள் முதன் முதலாக தலைதூக்கின. ஆலய நிதியைத் தனது சுயதேவைகளுக்கு ஆறுமுக மாப்பாணர் பயன்படுத்துவதாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று சுப்பையரால் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப்

பிரதம நீதியரசர் சேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் என்பவர் விசாரணை செய்தார். அவர் தனது தீர்ப்பை பின்வருமாறு வழங்கினார்.

''கந்தசுவாமி கோயிலின் சகல நடவடிக்கைகளையும் இன்றைய பிரதம குருவும் (ஆறுமுக) மாப்பாண முதலியாரும் இணைந்தே நிர்வகிக்கவேண்டும். ஆலயப்பொருட்களுக்கு சேதாரம் நேரா வண்ணம் அவை ஓர் அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அந்த அறை இரு பூட்டுக்களாலும் பூட்டப்படவேண்டும். அப்பூட்டுக்களின் சாவிகளிலொன்று பிரதம குருவிடமும் மற்றையது குறித்த (ஆறுமுக) மாப்பானரிடமும் இருத்தல் வேண்டும். இத்தீர்ப்பு ஆறுமுக மாப்பாண முதலியாருக்கு திருப்தியைத் தரவில்லை. கோயில் தம் குடும்பச் சொத்து. அதனால் கோயில் நிர்வாகம் முழுவதும் தமக்குரியதென அவர் கருதியதால் 1809 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கத்துக்கு ஒரு பெட்டிசம் ஒன்றினைச் சமர்ப்பித்தார். அப்பெட்டிசம் 1811 ஆம் ஆண்டு யாழ்ப்பாண கலெக்டரால் (அரசாங்க அதிபர்) விசாரணை செய்யப்பட்டது. அவர் முன் வைக்கப்பட்ட ஆதாரங்கள், கோயிலின் உரிமையில் மாப்பாண முதலியாருக்கே சாதகமாக இருந்தன. 'ஆறுமுக மாப்பாண முதலியார் கொடுத்த பெட்டிசத்தை விசாரித்த கறிங்ரன் என்னும் கலெக்டர் இம் மாப்பாண முதலியாரின் தகப்பனே இக்கோயிலைக் கட்டுவதற்கு முக்கிய காரணராயிருந்தமையால் இவரே கோயிலதிபதித்துவம் பெறுதற்குரியவரென்று அரசாட்சியாருக்கு அறிக்கை செய்தார். அதனால் 'சுப்பையர் குருக்களிடம்' நீதிபதி சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனால் வழங்கப்பட்ட ஆலயப் பண்டசாலையின் ஒரு திறப்பு குருக்களிடமிருந்து மீளப்பெறப்பட்டு ஆறுமுக மாப்பாணரிடம் கையளிக்கப்பட்டது. கந்தசுவாமி கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்த ஆறுமுக மாப்பாணர் தமது முன்னோர் போல, கச்சேரி சிறாப்பராகவும் விளங்கினார். 'கி.பி. 1811 இல் கச்சேரியில் காசு குறைந்ததென்னுங் காரணத்தால் மாப்பாணர் சிறாப்பு வேலையால் விலக்கப்பட்டார். விலகிய சில நாட்களுள் அவர் இறந்திருக்க வேண்டும். அவருக்குப் பின் அவர் மருமகனாகிய சின்னத்தம்பியென்பவர் கோயிலதிகாரத்தையேற்றார். பின்பு சிறாப்பு மாப்பாணருடைய பேரனாகிய (இரகுநாத) மாப்பாண முதலியார் அதிகாரியாயினர். '1807 இல் தீவாந்தர தண்டனையடைந்து மலாக்காவுக்கு அனுப்பப்பட்டு, 1812 இல் மன்னிக்கப்பட்டு திரும்பி வந்த வில்லவராய முதலியாரும் பெரிய தாமோதரம்பிள்ளையும் பிரமாணர் பக்கஞ் சார்ந்து (இரகுநாத) மாப்பாண முதலியாருக்கு மிகவும் இடர் விளைவித்தனர். அது பற்றி மாப்பாண முதலியார் 1819 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவர்கள் தனக்குச் செய்யும் இடையூறுகளைப் பற்றி பிறௌன்றிக் தேசாதிபதி அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்தனர். அதனை அவ்வூர் சர்வாதிகாரியே(கலக்டர்) கவனித்து அதற்கு வேண்டிய நீதி செய்யவேண்டும் என்று தேசாதிபதி கட்டளையிட்டனர். கலக்டர் செய்த நீதியின்னதென்று தெரியவில்லை. 'கி.பி. 1851 இல் கோயில் அர்ச்சகர்களாக இருந்த பிராமணர், தேசாதிபதியின் கைச்சாத்துடன் தங்கள் முன்னோருக்கு அதிகாரச் சிட்டுக் கொடுத்திருந்ததென்றும் தங்களுக்கும் அவ்வித சீட்டுக்கிடைக்கவேண்டும் என்றும் தேசாதிபதிக்கு விண்ணப்பித்தனர். அதற்குக் கண்டி ஆதீன புத்த கோயில்களிலுள்ள குருமாருக்கன்றிப் பிராமணருக்கு அவ்வித சீட்டுக் கொடுப்பதில்லையென்றும் அவர்களுள் வியாச்சியமிருந்தால் டிஸ்திரிக் கோட்டில் வழக்குத் தொடுத்து தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அரசாட்சியர் உத்தரவிட்டனர். அப்படியே வழக்கு வைக்கப்பட்டது. உடனே அக்காலத்திலிருந்த கோயிலதிகாரியாகிய இரகுநாத மாப்பாண முதலியார் பிராமணருக்கு அவ்வித அதிகார நியமனம் கொடுப்பதற்கு அரசினர்க்கு எதுவித சுதந்திரமுமில்லையென்றும் இருந்தால் இருந்தால் அரசினரே அதனை வெளிப்படுத்த வேண்டுமென்றும் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தனர். டயிக் ஏசண்டர் அவ்விண்ணப்பத்தைப் பற்றி விசாரித்துச் செய்த அறிக்கையினால் அரசாட்சியார் அக்காரியத்திற் பிரவேசியாது நெகிழவிட்டனர். எனவே, யாழ்ப்பாண கலெக்டரின் இச்செயலினால் கிருஷ்ணையர் சுப்பையரின் பரம்பரையினர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயவுரிமையை இழந்தனர். மாப்பாண குடும்பத்தினர் ஆலயத்தில் ஏகபோக உரிமையைப் பெற்றனர்.

### ஆதியில் வழங்கிய வழக்கம்

''55 திருவிழாக்கள் வருடந்தோறும் நடைபெறும். ஆறுகாலப் பூசை, மகோற்சவம் ஆடி - ஆவணியில் 25 நாட்களுக்கு நடைபெறும். சுவாமியை மக்கள் தோளிற் காவிக்கொண்டு நடந்தும் வாகனத்தில் வைத்தும் வீதிவலமாகச் சுற்றி வருவார்கள். கிழக்கு வீதியும் வடக்கு வீதியும் கோயிற்றெ, மேற்கு வீதி பருத்தித்துறை றோட்டிலிருந்து திருநெல்வேலிக்குச்செல்லும் தெரு. தெற்கு வீதி பருத்தித்துறை தெரு. மகோற்சவ காலத்தில் ' யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து 1000 தொடக்கம் 2000 யாத்திரிகர் சமூகமளிப்பர்' என வடமாகாண ஏஜண்டாக இருந்த சேர் வில்லியம் குறொப்ரன்துவைனம் தனது குறிப்பில் எழுதியுள்ளதாக குல சபாநாதன் தனது நூலிற் குறிப்பிட்டுள்ளார். ஆதியில் நல்லூர்க்கந்தசுவாமி கோயில் திருவிழா, இன்றைய காலவேளைகளில் நிகழும் திருவிழாக்கள் போன்று நிகழவில்லை. 'அறையும் பறையொலியோடு குமிழ்ஞ்சூ வெளிச்சத்தில் திருவிழா நடந்தது. பின்பு நானாவித வாத்தியவொலியோடு தீவர்த்தி வெளிச்சத்தில் திருவிழா நடந்தது. மேலும் தேர்த்திருவிழாவின்போது 'சுவாமி எழுந்தருளப் பண்ணும் தேரின் உருளையிலே வைரவருக்கும் பிரியமென்று ஆடு பலியிட்டே தேரினை இழுத்தார்கள்.

(தொடரும்)

-செங்கை ஆழியான்-

